1973 மார்ச் 19]

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட குப்பைக்கூளங்கள் போடப்படுகின்ற இடங்களில் ஏதாவது ஆசிட்டுகள் தெளிக்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே அதிலிருந்து வருகின்ற நாற்றத்தைப் போக்குவதற்கும், நோய்க்கிருமிகள் பரவாமல் இருப்பதற்கும் ஒரு விதமான மருந்து தெளிக்கப்படுகிறது.

Swing fog also is regularly used and fog malathion as well as pyrethrum solution is used. என்று கூறப்பட்டுள்ளது.

இதற்குத் தமிழிலே சொல்லப்படுகிற சொற்களை நான் தெரிந்து கொள்ளவில்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, பள்ளத்தை அடைக்க இந்த குப்பைக்கூளங்களைப் போடுகிறார்கள். இதை அதற்காகப் பயன்படுத்தாமல், அதை கம்போஸ்ட் உரமாக, நல்ல உரமாக்கி செய்தால் அது நல்ல பலனைத் தரும் அல்லவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த இடத்தில் வரப்போகிற பூங்காவிற்கு அது நல்ல கம்போஸ்ட் உரமாக இருக்கும்.

Water Pollution of Adyar River

* 419 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a Four-member Committee went into the Water Pollution of the Adyar River; and

(*b*) if so, the details of the composition of the Committee and the terms of reference?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்த நீரைக் கடலில் நேரடியாகக் கலக்கச் செய்வதன் மூலம் அதன் நிலைமை மாறும், அதைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கடல் நீரைக் கலக்கச் செய்வதன் மூலம் அந்த நீர் நிலையில் இருக்கும் அழுக்குத் தன்மையைத்

தானகவே குறைக்க முடியும். அது வேறு. ஆனல் இங்கே கேட்கப்பட்ட கேள்வி

whether it is a fact that a four member Committee went into the water pollution of the Adayar river? There was no Committee.

நான் அதற்கு பதிலாகத்தான் அந்தக் குழு நியமிக்கப்படவில்லை என்று சொன்னேன். ஆனல் சென்னையிலே பொறியியற் கல்லூரியைச் சேர்ந்த பப்ளிக் ஹெல்த் இன்ஜினீரிங் மாணவர் ஒருவர். அவருடைய ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்காக அந்த நீர் நிலையில் தன்மைகள், ஆகியவற்றைச் சேகரித்து இருக்கிறர் என்று கருதுகிறேன். அதிலிருந்து சில புள்ளிவிவரங்களைத் தேடி எடுத்து அதன் அடிப்படையில் சில கருத்துக்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, அண்மையில் கூவத்தின் நீர்த் தன்மைக் கெட்டு விட்டதால், மீன்கள் உயிரிழந்து கரைக்கு வந்து விட்டன என்பது அரசுக்குத் தெரியுமா? அந்தமாதிரி மீன்களைப் பிடிப்பதற்காக நூற்றுக்கணக்கானவர்கள் தூண்டிலோடு அங்கே வந்தார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கூவம் ஒரு சிறு ஆறு. கடலிலேயே இந்தமாதிரி நிலைமைகள் தற்காலத்தில் ஏற்படுகின்றன. சமீபத்தில் இராமேஸ்வரம் பகுதியில் இரண்டு மாதங்களுக்கு முன்பு மீன்கள் இறந்து கரையில் ஒதுங்கியதாகச் சொல்லப்படுகிறது. சமுதாயத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் போல், விஞ்ஞான வளர்ச்சியால் சில சமயங்களில் கடல் நீரில் கூட அத்தகைய மாற்றம் ஏற்படுகிறது.

திரு. மே. சி. தூயமணி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கூவம் ஆற்றைச் சீர்படுத்தி படகு விடுவது போல், இந்த அடையாறு ஆற்றையும் சீர்படுத்தி ஆழ்கடல் வரை அதை ஒழுங்குபடுத்தி, படகு விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி ஒரு உத்தேசம் இருந்தாலும் அதை அறிவிக்கிற இடத்தில் நான் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், ஒரு பப்ளிக் ஹெல்த் இன்ஜினீரிங் ஸ்டூடன்ட் ஒரு ஆராய்ச்சி செய்து தீசி எழுதியிருப்பதாகச் சொன்னர்கள். அவருக்கு டாக்டரேட் பட்டம் கிடைத்து இருக்கிறதா? அவர் தானகவே

எழுதியிருப்பாரானல் அந்த முடிவுகள் இந்தச் சபை முன் சமர்ப்பிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதை அவர் பல்கலைக் கழகத்திடமிருந்து பெற வேண்டும். அதிலே இருக்கும் உண்மைகள் எந்த அளவுக்கு டாக்டரேட் பட்டம் கொடுப்பதற்குத் தகுதியானது என்பதை ஆராய்ந்து அந்த குழுவிலே உள்ள மேதைகள் முடிவு செய்ய வேண்டிய தொன்றாகும். அந்த இரண்டின் மீதும் கருத்துச் சொல்ல அரசுக்கு இயலாது.

Village Courts

* 420 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to revive the village courts in villages; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை. ஆனல் நீதி மன்றங்களை ஏற்படுத்துவதற்கான சட்டத்தின் செயற்குறிப்பை அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இப்போது சாதாரணமாக உள்ள சிறுசிறு கேஸ்கள் பொதுஜன கோர்ட்டில் இருப்பதால் காலதாமதமும், பணச்செலவும் ஏற்படுவதன் காரணத்தால் சர்க்காரே ஒவ்வொரு கிராமங் களுக்கும் நீதி மன்றங்களை அனுப்பி, சிறு சிறு கிரிமினல் கேஸ்கள், மற்ற கேஸ் களுக்கு முடிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீதிமன்றங்களை நாம் விரும்புகிறபடி அனுப்புவதற்கு முடியாது. உயர் நீதி மன்றம் எந்த இடங்களில் நீதிமன்றம் தேவை என்று கருதுகிறதோ அங்கே தான் போட முடியும். இப்போதுள்ள கேள்வி, கிராமப்புறங்களில் கிராம நீதி மன்றங்களை ஏற்படுத்தலாமா என்பது பற்றியதாகும். அதற்கான சட்டத்தை அரசு பரிசிலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ஏற்கெனவே கிராம நீதி மன்றங்கள் செயல்பட்டுக்கொண்டிருந்தன, மதுரை போன்ற இடங்களில் கூட இருந்தன. அதைத் தொடர்ந்து செயல்படுத்தும் முறையில் சட்டம் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலில் வில்லேஜ் கோர்ட் சட்டம் என்று இருந்தது. அதன்படி வில்லேஜ் கோர்ட் உருவாக்கப்பட்டது. அதற்குப்